செ.வெ.எண்: 563

செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உலக சுற்றுலா தினத்தையொட்டி இன்று (27.9.2012) தலைமைச் செயலகத்தில், சுற்றுலாத்துறையின் சார்பில் மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றத்தில் 3 கோடியே 87 லட்சத்து 63 ஆயிரம் ரூபாய் செலவில் புதியதாக அமைக்கப்பட்ட சுற்றுச் சூழல் பூங்காவினை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள். மேலும், 6 கோடியே 82 லட்சத்து 44 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட சுற்றுலாப் பயணிகளுக்கான புதிய திட்டப் பணிகளையும் திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாடு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதில் இரண்டாமிடத்திலும், உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதில் மூன்றாமிடத்திலும் உள்ளது. தமிழ்நாட்டிற்கு வருகை தரும் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி நாட்டிலேயே சுற்றுலாத் துறையிலும் முதன்மை மாநிலமாக தமிழகத்தை உருவாக்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு செயல்பட்டு வருகிறது.

சுற்றுலாத்துறையின் சார்பில் மதுரை மாவட்டம் – திருப்பரங்குன்றத்தில், திறந்த வெளி அரங்கம், தகவல் மையம், ஓய்வு குடில்கள், சிறுவர் விளையாட்டு பூங்கா, அலங்கார வளைவு, இருக்கை வசதிகள், சிற்றுண்டிச் சாலை, நடன நீரூற்று, அலங்கார மின்விளக்குகள், கழிவறைகள், வாகனம் நிறுத்துமிடம் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் 3 கோடியே 87 லட்சத்து 63 ஆயிரம் ரூபாய் செலவில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள சுற்றுச் சூழல் பூங்காவினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

மேலும், சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக, மதுரை மாவட்டம் – எல்லீஸ் நகரில் 72 லட்சத்து 78 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சுற்றுலா பயணிகளுக்கான ஓய்வறைகள், அழகர் கோவிலில் 43 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள பெரியாழ்வார் நந்தவனப் பூங்கா; நாகப்பட்டினம் மாவட்டம் – தரங்கம்பாடியில் 87 லட்சத்து 12 ஆயிரம் ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்ட டேனிஷ்

கவர்னர் மாளிகை; நீலகிரி மாவட்டம் – கூடலூரில் 10 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சுற்றுலா தகவல் மையம்; வேலூர் மாவட்டம் – ஸ்ரீபுரம் தங்கக் கோவில் அருகில் 97 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள பொருள் வைப்பு அறை மற்றும் ஓய்வுக்கூடம்; காஞ்சிபுரம் மாவட்டம் – கோட்டைக் காவல் கிராமத்தில் 92 லட்சத்து 92 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கலை மற்றும் பண்பாட்டு வளாகம்; கரூர் மாவட்டம் – அய்யர் மலையில் அமைந்துள்ள அருள்மிகு ரத்னகிரீஸ்வரர் கோவிலில் 50 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஓய்வறை, அருங்காட்சியகம், வரவேற்பறை, யோகா மற்றும் தியான மண்டபம்; தருமபுரி மாவட்டம் – ஒகேனக்கல் பேருந்து நிலையத்தில் 1 கோடியே 83 லட்சத்து 12 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வாகனம் நிறுத்தும் இடம்; ஈரோடு மாவட்டம் – கொடிவேரி அணைக்கட்டில் 46 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள பூங்கா, கழிவறைகள், இருக்கை வசதிகள், அணுகு சாலை; என மொத்தம் 6 கோடியே 82 லட்சத்து 44 ஆயிரம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ள சுற்றுலா பயணிகளுக்கான புதிய திட்டப் பணிகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், சுற்றுலாத் திட்டங்களை விரைந்து செயல்படுத்தவும், சுற்றுலாத்துறையின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையிலும், சுற்றுலா அலுவலர்களுக்கு அலுவலகப் பயன்பாட்டிற்காக 98 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 14 ஜீப்புகளை இன்று வழங்கினார்கள்.

மேலும், தமிழகத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பிற்காக “சுற்றுலாப் பாதுகாப்பு அமைப்பு” ஏற்படுத்தப்பட்டு, உதகமண்டலம், கொடைக்கானல், இராமேஸ்வரம், கன்னியாகுமரி மற்றும் மாமல்லபுரம் ஆகிய 5 இடங்களில் இவை செயல்பட்டு வருகின்றன. மேற்கண்ட ஐந்து நிலைய சுற்றுலா காப்பாளர்களுக்கு 3 லட்சத்து 74 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 5 மோட்டார் சைக்கிள்களை இன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் பணியிலிருக்கும்பொழுது காலமான ஒன்பது பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணைகளை இன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வழங்கினார்கள்.

சுற்றுலாப் பயணிகள் ஒரு பகுதியில் உள்ள திருக்கோவில்கள், பாரம்பரியமிக்க சுற்றுலாத் தலங்கள் மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்கள் ஆகியவற்றை தனித்தனியாகவோ, ஒன்றாகவோ ஒரே சுற்றுலாவில் சிரமமின்றி கண்டுகளிக்கும் வகையில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நகரத்தார் கோவில்கள் சுற்றுலா, திருக்கடையூர் கோவில்கள் சுற்றுலா, ஸ்ரீரங்கம் மற்றும் திருச்சிராப்பள்ளி கோவில்கள் சுற்றுலா மற்றும் சுதந்திரப் போராட்ட வீரர் தலங்கள் சுற்றுலா ஆகிய நான்கு புதிய சுற்றுலாக்களை இன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

இந்தியாவில் உள்ள சுற்றுலா வளர்ச்சிக் கழகங்களில் முதன் முறையாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் செயல்பட்டு வரும் ஓட்டல்கள் மற்றும் சுற்றுலாக்களுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக உலகின் எந்தப் பகுதியிலிருந்தும் மொபைல் போன் மூலம் www.ttdconline.com/mobile என்ற இணையதளத்தில் தொடர்பு கொண்டு, முன்பதிவு செய்யும் புதிய திட்டத்தையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று **(27.9.2012)** துவக்கி வைத்தார்கள். இத்திட்டத்தின் மூலம் முன் பதிவு உறுதிச் செய்தி, ஆன்லைன் மூலமாக சுற்றுலாப் பயணிகளின் மின்னஞ்சல் முகவரிக்கும், குறுஞ்செய்தியாக மொபைல் போன் எண்ணிற்கும் அனுப்பி வைக்கப்படும்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர், சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
நாள்: 27.9.2012